திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவரவர்களே, கடந்த ஆண்டில் இதே கேள்வியைக் கேட்கும்போது அமைச்சரவர்கள் 'மிக விரைவிலே செயல்படுத்தப்படும்' என்று கூறினார்கள். ஆகவே இந்த ஆண்டிலாவது, தண்ணீர் வீணாகக் கடலிலே கலப்பதைத் தடுக்கின்ற வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் சொல்லியதைப்போல் கடந்த 4—11—1978-லேயிருந்து பொதுப்பணித் துறை பொறியாளர்கள் வனத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கே வனத்தின் ஊடே சென்று ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. ஆனால் வனத்துறையின் அதிகாரிகள் பொறியாளர்களுக்கு வனத்தில் பிரவேசிக்க இடம் கொடுக்க மறுக்கிறார்கள். ஆனாலும் அரசு பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமான ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Small Scale Industries.

*Q. No. 822: Thiru S. M. Vasan : Will the Hon. the Minister for Rural Industries be pleased to State :

(a) Whether a number of Small Scale Industries financed by the State Financing bodies are reported sick; and

(b) the details thereof?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :—

(அ) மேலும் (ஆ) ஒரு * விவர அறிக்கை இந்த அவையின் முன் வைக்கப்படுகிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் நலிவு பெறுவது எதனாலென்றால் பெரும்பாலும் மூலப் பொருள்கள் பெறுவதிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்கவும் தான் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, உத்தரவாதப்படுத்தும் வகையில் அரசு அந்த மூலப் பொருள்களை விநியோகிப்பதற்கும் உற்பத்தி பொருளை விற்பதற்கும் வாய்ப்பளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில் வளர்ச்சி பற்றிய கொள்கை குறிப்பின் மீது மேலவையில் பதில் அளிக்கும்போது திட்டவட்டமாக இதைப்பற்றி

[* 474ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது]

அறிவித்திருக்கிறார்கள். சிறுதொழில்கள் நலிவுறாத வகையில் மூலப் பொருள்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு, அரசுக்குத் தேவையானவற்றை சிறு தொழில்களிடமிருந்து வாங்கி, அவர்கள் பயன் பெறுகிற வகையில் செய்வதற்கு, 'சிட்கோ' நிறுவனம் அந்த முறையை மேற்கொண்டிருக்கிறது. சிறுதொழில்கள் பிரச்னை பெருமளவிற்கு தீர்க்கப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் பட்டுப் பூச்சி வளர்ப்பு.

* வினா எண். 823— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பு திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) எத்தனை ஏக்கரில் இந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :—

(அ) ஆம்.

(ஆ) 1978-79-ல் 213 ஏக்கரா பரப்பில் இத்திட்டம் மேற் கொள்ளப்பட்டது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 213 ஏக்கரா நிலப்பரப்பில் அமுல்படுத்துவதாகச் சொன்னார்கள். இப்போது அவைகள் செடியாக இருக்கின்றனவா? எந்த நிலையில் இருக்கிறது? பட்டுப் பூச்சி உற்பத்தியாகும் நிலையில் இருக்கிறதா என்பதையெல்லாம் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 1978-79-ஆம் ஆண்டில் இது மேற்கொள்ளப்பட்டது. இப்போது 1979-80 ஆம் ஆண்டில் இருக்கிறோம். அந்த ஆண்டில் 213 ஏக்கருக்கு மேல் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. தஞ்சாவூரில் மிகச்சிறந்த முறையில் அந்தப் பட்டுப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு, அனைத்து இந்தியாவிலேயே மிகச் சிறந்தது என்று சொல்லக் கூடிய அளவிற்கு அந்தப் பட்டுக் கூடுகளை கும்பகோணத்தில் உற்பத்தி செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதை அதிகரிப்பதற்கு ஏதாவது வகை செய்யப்பட்டிருக்கிறதா? சென்ற ஆண்டு அந்தப் பயிர் போட்டதில் அவர்கள் வருவாய் எப்படி இருந்தது?